?68

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 05

**LEU5558– ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான முதல்மொழி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 03.03.2024 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. மெய் எழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அந்த வகைகளை எழுதி, ஒவ்வொரு வகையிலும் உள்ளடங்கும் மெய் எழுத்துக்களை எழுதுக.
2. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
3. உடனிலை மெய்மயக்கம் என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
4. பன்மை விகுதிகளை உதாரணங்களுடன் தருக.
5. "புணர்ச்சி" என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
6. சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் ஐந்தினை (05) சுருக்கமாக விளக்குக.
7. சிறுவர் எனப்படுவோர் யார் என்பதை வயது மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்திக் காட்டுக.
8. **i.** ஆக்க இலக்கியங்கள் ஐந்தினைப் (05) பெயரிடுக.

   **ii.** ஆக்கம் சாரா இலக்கியங்கள் ஐந்தினைப் (05) பெயரிடுக.

**(08 x 05 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

9. **(i)** "உயிர்முன் மெய் புணர்தல் மூன்று வகைப்படும்." அவ்வகைகளை எழுதுக.

**(04 புள்ளிகள்)**

**(ii)** வல்லினம் மிகும் இடங்கள் 16 உள்ளன. அவற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

**(16 புள்ளிகள்)**

10. **(i)** "விகாரப் புணர்ச்சி" என்றால் என்ன?

**(05 புள்ளிகள்)**

**(ii)** விகாரப் புணர்ச்சியின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

**(15 புள்ளிகள்)**

11. **(i)** “இலங்கையில் வழக்கிலுள்ள தமிழ்ப் பேச்சு வழக்குகளை பட்டியலிடுக.

**(04 புள்ளிகள்)**

**(ii)** மேலே நீங்கள் பட்டியலிட்ட பேச்சு வழக்குகளை விளக்குக.

**(16 புள்ளிகள்)**

12. **(i)** மொழியின் சமுதாயப் பணிகளை பட்டியலிடுக.

**(05 புள்ளிகள்)**

**(ii)** அப்பணிகளை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

13. **(i)** “ஆக்க இலக்கியம்” என்னும் பதத்தினால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

**(05 புள்ளிகள்)**

**(ii)** ஆக்க இலக்கியப் படைப்பாளி ஒருவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளை பட்டியலிடுக.

**(05 புள்ளிகள்)**

**(iii)** மேலே வினா **(ii)** இல் நீங்கள் பட்டியலிட்ட தகுதிகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(முழுப்பதிப்புரிமையுடையது)**